
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1205

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

61

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# கழகமே உயிர்; கொள்கையே மூச்சு!

**கா.**சொ.கணேசன் அவர்கள் முழுநேர அரசியலுக்கு வந்த பின்பும் கூட, ஏழ்மையின் காரணமாகப் பகல் நேரங்களில் வயல் வேலைகளில் ஈடுபடுவார். அதில் கிடைத்த வருமானத்தை, பொதுச்சேவைகளுக்குப் பயன்படுத்தினார். 1962-இல் தா.பழூரில் கலைஞர் மற்றும் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் கலந்துகொண்ட கூட்டத்தில் மேடையேறிப் பேசிய கா.சொ.கணேசன், கிராமப்புற வழக்கில் சுயமரியாதைக் கருத்துகளை அள்ளித்தெளித்தார். அதன்பிறகு, அப்பகுதியில் பல கூட்டங்களை அவரே நடத்தியுள்ளார்.

1964-இல் நடைபெற்ற மொழிப்போரில் பங்குபெற்று, ஜெயங்கொண்டம் தலைமை அஞ்சல் அலுவலகம் முன்பு மறியலில் ஈடுபட்டார். அதன் காரணமாக, இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனை கிடைத்து, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். தி.மு.கழகம் முன்னெடுத்த எந்தப் போராட்டத்திலும் இவர் பங்கெடுக்காமல் இருந்ததே இல்லை. 1967-ஆம் ஆண்டு, உடையார்பாளையம் வட்ட தி.மு.கழகச் செயலாளர் பொறுப்பு கிடைத்தது. அப்போது உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று, தி.மு.கழகக் கோட்டையாக அப்பகுதியை மாற்றினார். திராவிடர் கழக நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவு கொடுப்பார். பெரியார் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி என்றால், தி.மு.கழகத் தொண்டர்களையும் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கச் செய்வார். கழக உடன்பிறப்புகளின்



திருமணங்களை, சீர்திருத்த திருமணங்களாக நடத்தினார். ராகு காலம் வரும்வரை, மணமக்களைக் காத்திருக்கச் செய்வார். ‘நல்ல நேரம் போகிறதே’ என உறவினர்கள் யாராவது கேட்டால், தனக்கே உரிய பாணியில் பகுத்தறிவுக் கருத்துகளை அவர்கள் மனத்தில் விதைப்பார்.

27.08.1972 அன்று, அவரது திருமண நாளில்தான் ஜெயங்கொண்டம் குடிநீர்த் தேவைக்காகக் கொள்ளிடத்தில் இருந்து நீர் கொண்டுவர மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழ்நாட்டின் முதல் கூட்டுக் குடிநீர்த் திட்டமான இதை நிறைவேற்ற, கா.சொ.கணேசனின் விடாமுயற்சி முக்கியக் காரணமாகும். அதேபோல மதனத்தூர் முதல் நீலத்தநல்லூர் வரை கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்ட வேண்டும் என்று சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தார். இரு பகுதி மக்களும் இந்தப் பாலம் இல்லாததால், 45 கி.மீ. முதல் 60 கி.மீ. வரை சுற்றிச்செல்ல வேண்டியிருப்பதன் சிரமத்தை, கலைஞரிடம் பலமுறை நேரிலும் எடுத்துச் சொன்னார். அதன்படி, 2010-இல் துணை முதல்வராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், இந்தப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார். 2013-இல் பாலம் திறக்கப்பட்டது. எந்த நேரம் என்றாலும், யார் என்றாலும் எளிதாக அணுகித் தங்கள் குறைகளைச் சொல்லக் கூடிய நபராக கா.சொ.க. திகழ்ந்தார்.

சொந்த முயற்சியால் தா.பழூர் கிராமத்தில் தனது கொள்கைத் தலைவர்களான பெரியாருக்கும் அண்ணாவுக்கும் முழு உருவ வெண்கலச் சிலை வைத்தார். 22.08.2005 அன்று காலையில் ஆறு சுயமரியாதைத் திருமணங்களை நடத்திவைத்து, மேலும் சில நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு, தா.பழூர் தி.மு.கழக அலுவலகத்திற்குச் சென்றார். வேலூரில் அப்போது நடைபெறவிருந்த தி.மு.கழக மாநாட்டிற்குச் செல்வது பற்றியும், மறுநாள் நடைபெறவிருந்த ஒன்றிய செயற்குழுக் கூட்டம் தொடர்பாகவும் ஆலோசித்துக் கொண்டிருந்தபோதே மாரடைப்பு ஏற்பட்டது. கழகத்தையே மூச்சாகச் சுவாசித்தவரின் மூச்சுக் காற்று, கழக அலுவலகத்திலேயே நின்றது. உடல்தான் மறைந்ததே தவிர, அவரது உழைப்பை எவராலும் அழிக்க முடியாது என்ற அளவுக்கு தா.பழூரின் அடையாளம் ஆகியிருக்கிறார். கட்டமைப்புகளை மட்டுமல்ல, கட்டுக்கோப்பான கொள்கைத் தளகர்த்தர்கள் பலரையும் உருவாக்கியவர் கா.சொ.கணேசன்.

**...பயணம் தொடரும்**

## அரசியல் பயிற்சியே அடித்தளம்!

**ச**மகாலத்தின் அரசியல் பிரச்சினைகள், தமிழ்நாட்டின் கடந்த கால வரலாற்றுப் பயணம் ஆகியவற்றைப் பொருட்படுத்திப் பார்க்கத் தவறியதன் விளைவு, ‘திராவிட மாடல்’ நல்லாட்சியைத் தமிழ்நாடு தவறவிட்டது. பேசியும் எழுதியும் வளர்ந்த இயக்கம், ‘திராவிட இயக்கம்’. தற்போது நவீன தொழில்நுட்ப வடிவங்களுக்கு ஏற்ப புத்தாக்கத்துடன் செயல்பட வேண்டிய தேவையை உணர்ந்து, புதிய வடிவங்களிலும் அரசியல் பயிற்சிகளை நடத்தும் பணிகளைத் தொடங்கியுள்ளது.

அந்த வகையில், மார்க்சியம் – பெரியாரியம் – அம்பேத்கரியம் சார்ந்த இரண்டு நாட்கள் தத்துவப் பயிலரங்கினை, அரியலூரில் நடத்த உள்ளது, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி. 23.05.2026 மற்றும் 24.05.2026 சனி, ஞாயிறு இரு நாட்கள் நடைபெறும் இந்தப் பயிலரங்கில், 10–ஆம் வகுப்பிற்குமேல் படித்துள்ள மாணவர்கள் என்கிற அளவில், முன்பதிவு செய்து கலந்துகொள்ளலாம். உணவு, தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

‘இந்திய அரசியலமைப்புச் சட்டம்’, ‘திராவிட இயக்கமும் தமிழ்த் தேசியமும்’, ‘அண்ணல் அம்பேத்கரும் சாதி ஒழிப்பும்’, ‘மார்க்சிய மெய்யியல்’, ‘இட ஒதுக்கீடு’, ‘இந்துத்துவ அச்சுறுத்தல்’ ஆகிய தலைப்புகளில் பயிலரங்கு நிகழ உள்ளது. கழகத்தின் முன்னாள் அமைச்சரும் அரியலூர் மாவட்டச் செயலாளருமான சா.சி.சிவசங்கர் தொடங்கிவைக்க, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் வாலாசா வல்லவன், சா.குப்பன், துரை.சித்தார்த்தன், முருகை மைந்தன், கா.குப்புசாமி ஆகியோர் பங்கேற்று பயிற்சி அளிக்க உள்ளனர். கலந்துரையாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

அரசியல் பயிற்சியே அடித்தளம். அதைச் செவ்வனே அறிந்து செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ..? தொடர்புக்கு : 98434–27724

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் மேடையில், என் தந்தையார்!



ஆலவயல் முரளி சுப்பையா

1990-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9–ஆம் தேதி, திருமயம் அருகே உள்ள கல்லூர் ஊராட்சி மன்றக் கட்டட அலுவலகம் திறப்பு விழா, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. விழாவில், அப்போதைய திருமயம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த என் தந்தையார் ஆலவயல் சுப்பையா அவர்கள் உரையாற்றிய காட்சி. மேடையில், தலைவருடன் அன்றைய சட்டப்பேரவைத் தலைவர் மு.தமிழ்க்குடிமகன், கழக முன்னோடி எல்.கணேசன், அன்றைய அமைச்சர்கள் அண்ணன்கள் கே.என்.நேரு, க.பொன்முடி, க.சந்திரசேகரன் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ள இந்தப் புகைப்படம் என் மனதுக்கு மிகவும் நெருக்கமானது.

**– ஆலவயல் முரளி சுப்பையா எம்.சி.ஏ.,**
**பொன்னமராவதி தெற்கு ஒன்றியம்,**
**திருமயம் தொகுதி, புதுக்கோட்டை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204–51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

111

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# நேர்மறை நிர்வாகமும் ரீல்ஸ் நிர்வாகமும்...

**சமூக ஊடக வர்த்தகர்கள் மூலம் மக்களை மூளைச்சலவை செய்து, பொய் வாக்குறுதிகளை வழங்கி, வெற்றி பெற்றவர்களின் ஆட்சியில் வெளியாகும் அறிவிப்புகள் எப்படி உள்ளன?**

100% அக்மார்க் பொய் அறிவிப்புகளின் ஆட்சியாகவே உள்ளது. அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் பலரின் கல்வித் தகுதி குறித்து தேர்தல் வேட்புமனு வாக்குமூலத்திலேயே பொய்யான தகவல்களைப் பதிவு செய்திருப்பது அம்பலமாகியிருக்கிறது. அதனைத் தேர்தல் ஆணையமும் நீதிமன்றங்களும் கவனிக்கட்டும். அதே நேரத்தில், ஆட்சி சார்ந்த அறிவிப்புகள் என்ற பெயரில், தி.மு.க. தலைமையிலான திராவிட மாடல் அரசு கொண்டுவந்த திட்டங்களையே புதிய அறிவிப்புகள் போல வெளியிட்டு, தனக்கு வாக்களித்த மக்களை ஊடகங்களின் துணையுடன் ஏமாற்றி வருகிறது ரீல்ஸ் அரசு.

பத்திரப் பதிவுத்துறை – சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வருபவர்களை உட்கார வைத்துப் பேச வேண்டும் என்றும், அதற்கேற்ப நாற்காலிகள் இருக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக மே 16–ஆம் தேதி ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுப் புளகாங்கிதம் அடைந்து கொண்டிருந்தன. வழக்கம்போல, ‘சோஷியல் வாரியர்கள்’ எனப்படும் ‘பொய்ப் பரப்பிகள்’ அதனைப் பரவலாக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அந்தச் சுற்றறிக்கையில், 15.05.2025 என்று தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது,



தி.மு.க. ஆட்சியில் பொதுமக்கள் நலன் கருதியும், அவர்களுக்கு மதிப்பளித்தும் வெளியான சுற்றறிக்கையை, இப்போது வந்துள்ள அரசு வெளியிட்டது போல ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறார்கள். பெண்களின் பாதுகாப்புக்காக ‘பிங்க் பேட்ரோல்’ எனும் இளஞ்சிவப்பு நிற வாகனத்தில் காவல் துறையினர் ரோந்து வருவது, தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டமாகும். ஆனால், அதற்கு ‘சிங்கப்பெண்’ என்று ஸ்டிக்கர் ஒட்டி இருக்கிறது, புதிதாக அமைந்துள்ள மோசடி ஆட்சி.

பள்ளிகள், கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் அருகே டாஸ்மாக் கடைகள் இயங்கக்கூடாது என்பது பல ஆண்டுகளாக உள்ள நடைமுறை. கடந்த தி.மு.க. ஆட்சியில் இத்தகைய இடங்களின் அருகே இருந்த 500 டாஸ்மாக் கடைகள் அகற்றப்பட்டு, அவற்றின் பட்டியலும் வெளியிடப்பட்டது. ஆனால், மோசடி அரசு நிர்வாகத்தில் 700–க்கும் அதிகமான கடைகள் அகற்றப்படுவதாகச் செய்தி வெளியாகி, அது குறித்து வழக்கம் போல ரீல்ஸ் பரப்புரையும் நடந்தது. மதுபானக் கடைகள் மூடப்படவில்லை. மாறாக, மாற்று இடம் தேடும் பணியும், தனியார் பார் திறக்கும் பணியும் கனஜோராக நடந்து கொண்டிருக்கின்றன. 21 வயது நிரம்பியவர்களுக்குத்தான் மதுபானங்களை விற்பனை செய்ய வேண்டும் என்பதும் பழைய சுற்றறிக்கைதான். அதை ஏதோ விஜய் புதிதாகக் கண்டுபிடித்தது போல தேதி, ஆண்டுகூடப் பார்க்காமல் பரப்புகிறது ரீல்ஸ் அரசு.

ஆலிவ் ரிட்லி எனும் ஆமைக் குஞ்சுகளைக் கடலில் விடும் நிகழ்வு, பல ஆண்டுகளாக நடக்கிறது. இப்போதுதான் முதன்முறையாக நடப்பது போல அதற்கும் ஒரு விளம்பர வெளிச்சம் தரப்படுகிறது. எல்லாமே முந்தைய தி.மு.க. அரசின் முன்னெடுப்புகள்தான். மாதம் 2,500 ரூபாய் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற வக்கில்லாமல், கழகத் தலைவர் ஆட்சியின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்படி வழங்கப்பட்ட அதே 1,000 ரூபாயை வழங்குவது போலத்தான், நாளொரு பொய்யும் பொழுதொரு புளுகுமாக ரீல்ஸ் ஆட்சியின் தொடக்கம் அமைந்துள்ளது.

**...வினா தொடரும்.**

## கருவூலம்

### நாவலர் மொழிந்த தீர்மானம்!

1986-ஆம் ஆண்டு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு சட்ட நகல் எரிப்பு அறப்போரில் பங்கேற்று சிறை சென்றிருந்த கழக சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிகளைப் பறித்து, சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தார், நாவலர். ‘இந்தப் பதவி பறிப்பு, மொழிப்போராட்டத்துக்குக் கிடைத்த விழுப்புண்’ என்று திராவிட இயக்க உணர்வாளர்கள் கருதினாலும், பதவி நீக்கத் தீர்மானத்தை முன்மொழிந்தது நாவலர் என்ற செய்தி அறிந்து வேதனை அடைந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900